வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 66/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 08.11.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுந்திரரேசன் | | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1 முதல் 5 ஆஜர். )

**குறுக்கு விசாரணை**

(மனு அனுமதிக்க செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்.)

எப்போதாவது நானும் எனது மனைவியும் இல்லாதபோது மகேந்திரனை கடையை பார்த்துகொள்ள சொல்வோம் என்றால் சரிதான். மகேந்திரனின் மனைவி அதுபோல் கடையை பார்த்துக்கொள்வார் என்றால் சரியல்ல. நான் 8ம் வகுப்புவரை படித்துள்ளேன். மகேந்திரனை சம்பவயிடத்திலிருந்து மருத்துவமனைக்கு எடுத்துசெல்லும்போது போலீசார்கள் இருந்தார்களா என்று அந்த குழப்பத்தில் எனக்கு தெரியவில்லை. சம்பவம் நடந்த பிறகு கடையை யார் பூட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. 10 நாட்களுக்கு பிறகு தான் கடையை திறந்தேன். சாவியை அன்று என்னிடம் கொடுத்திருப்பார்கள் ஞாபகமில்லை. கடைக்கு பக்கத்தில் ஓய்வு பெற்ற போலீசார் வீடு உள்ளது. அமுதா மற்றும் கீதாலட்சுமியின் வீடு உள்ளதா என்று தெரியவில்லை. கடைக்கு வலதுபக்கம் நத்தம்பேடு போகும் சாலை உள்ளது என்றால் சரிதான். கடைக்கு எதிர்புறம் திருமணத்திற்கு பந்தல் போடும் கடைஉள்ளது என்றால் சரிதான். அதற்கு பக்கத்தில் சிமென்ட் சீட் போட்ட வீடு உள்ளதா என்றால் வீடு உள்ளது. சிமென்ட் சீட் போட்டதா என்று தெரியாவில்லை. சம்பவம் 6.30 மணிக்கு

நடந்தது. மருத்துவமனைக்கு செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்து ஒரு மணி நேரத்தில் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையிலிருந்து கால் மணி நேரத்தில் திரும்ப வந்துவிட்டோம். சம்பவம் நடந்த கடையில் தின்பண்ங்கள் வியாபாரங்கள் செய்கிறோம் என்றால் சரிதான். அங்கே தண்ணீர் கேன்கள் வியாபாரங்கள் செய்யவில்லை என்றால் சரிதான். அதை ஒட்டி சாலையை தாண்டி தண்ணீர் கேன்களுக்கு வேண்டி தனியாக கடை வைத்துள்ளேன். அந்த கடையிலிருந்து தண்ணீர்கேன்கள் சம்பவம் நடந்த கடையில் எடுத்துகொண்டு வைத்துக்கொள்வோம். தேவைப்பட்டால் சம்பவம் நடந்த கடையிலிருந்து கூட தண்ணீர்கேன்கள் விநியோகம் செய்வோம். காவல் நிலையத்தில் எனது மனைவி புகார் கொடுத்த சமயத்தில் நானும் கையொப்பம் போட்டதாக ஏற்கனவே செய்த குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விவரத்தை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் ˙போலீசார்தானே எழுதி வாங்கிகொன்டார்கள். 1ம் எதிரி என் கடைக்குள் வெட்டியதாகவும் வெட்டு கத்தியை வைத்து வெட்டியதாகவும் நான் அப்போது கடையில் இருந்ததாகவும் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது தற்போது ஞாபகமில்லை. போலீசார் விசாரணையில் இந்த விவரத்தை நான் சொன்னேனா என்றால் நான் கடைக்கு வெளியே நின்றேன். இறந்த மகேந்திரனின் அண்ணன் முருகேசன் சம்பவ இடத்தில் இருந்த விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்த தேதி, வருடம் எனக்கு ஞாபகமில்லை. யார் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு முன்பாக புகைப்படம் எதுவும் காண்பிக்கவில்லை. எனக்கு வேண்டப்பட்டவர் இறந்தவிட்டார் என்ற காரணத்தினால் என்னை சாட்சியாக போலீசார் சேர்த்துள்ளார் என்றாலும் எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

(சாட்சி பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை

குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிரி என் கடைக்குள் வைத்து மகேந்திரனை வெட்டியதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியாது.

மறுவிசாரணை - இல்லை

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 66/2021 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 08.11.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராணி | | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1 முதல் 5 ஆஜர். )

**குறுக்கு விசாரணை**

(மனு அனுமதிக்க செய்யப்பட்டு சாடசி விசாரணை செய்யப்படுகிறார்.)

எனது முதல் விசாரணையில் உள்ள விவரங்களை தான் நான் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். சிறைச்சாலைக்கு எதிரிகளை அடையாளம் காட்ட என்னை மற்றும் எனது கணவரை, சாட்சி முருகேசனை அழைத்து சென்றதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் தங்களது காரில் எங்களை சிறைச்சாலைக்கு அழைத்து சென்றார்கள். புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான்கு எதிரிகளின் புகைப்படத்தை காண்பித்து என்னை அடையாளம் காட்ட சொன்னார்கள் என்றால் சரிதான். எங்கள் மூவரிடமும் காண்பித்தார்கள் என்றால் சரிதான். எதிரி தமிழ்செல்வன் என்ன நிற சட்டை சம்பவத்தின் போது அணிந்திருந்தார் என்ற விவரத்தை நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மகேந்திரனை நான்கு, ஐந்து நபர்கள் துரத்தி வந்ததாகவும் நான் சட்டரையை மூடினேன் என்றும் என்னை தள்ளிவிட்டு மகேந்திரனை அவர்கள் வெட்டிவிட்டதாகவும் நான் முதல் விசாரணையில் கூறிய அதே விவரத்தை புகாரில் சொல்லியுள்ளேன். சம்பவம்

எத்தனை மணிக்கு நடந்தது என்று ஞாபகமில்லை. எனக்கு வலது கண்பார்வை கிடையாது. ஆகவே நான் 6 மணிக்கு மேல் நான் பொதுவாக கடைக்கு செல்லமாட்டேன் என்று எனது முதல்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இறந்த மகேந்திரனின் மனைவி எனது குடும்ப நண்பர் என்றால் சரிதான். நான் மற்றும் எனது கணவர் ஊரில் இல்லாத சமயத்தில் மகேந்திரன் எனது கடையை பார்த்துகொள்வார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு கடையை யார் அடைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது கடைக்கு இடது பக்கம் அமுதாவின் வீடு என்றால் சரிதான். அதற்கு பக்கத்தில் கீதாலட்சுமி என்பவரின் வீடு என்றால ̇அதுபற்றி எனக்கு தெரியாது. வலதுபக்கம் நத்தம்பேடு சாலை என்றால் சரிதான். கடைக்கு எதிரே திருமண பந்தல் தயாரிக்கும் கடை, சிமென்ட் சீட் போட்ட வீடு மற்றும் கடைக்கு பின்பக்கம் பெண் போலீசாரின் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு போலீசார் வந்ததாக கேள்விபட்டேன். நான் சம்பவம் நடந்தவுடன் அந்த இடத்திலிருந்து கிளம்பி விட்டேன். மகேந்திரனின் உடலை எடுத்துக்கொண்டு செல்லும்போது நான் சம்பவஇடத்தில் இருந்தேன். அப்போது போலீசார் பிரேதத்தை அங்கே இருந்து வாகணத்தில் ஏற்றிஅனுப்பினார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2 நாட்கள் கடையை நான் திறக்கவில்லை. கடையை பூட்டி எனது கணவர் சாவியை வீட்டிற்கு எடுத்து வந்தார் என்றால் சரிதான். என் கணவர் அன்று வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டார். மறுநாள் காலை காவல் நிலையம் நான் செல்லவில்லை. சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்தோம். குறிப்பிட்டு எத்தனை மணிக்கு கொடுத்தோம் என்று ஞாபகமில்லை. நாங்கள் நடத்தும் கடை வாடகை கட்டிடத்தில் உள்ளது. கட்டிடத்தின் உரிமையாளர் மணிவண்ணன் ஆகும். எங்களது கடையில் தின்பண்டங்கள் வியாபாரம் செய்கிறோம் என்றால் சரிதான். அங்கே தண்ணீர்கேன் விற்பனை செய்வதில்லை. அதை பக்கத்தில் உள்ள வேறு கடையில் நாங்கள் வியாபாரம் செய்கிறோம். மகேந்திரனை அடையாளம் தெரியாத நபர்கள் எனது கடைக்குள் வைத்து வெட்டிவிட்டார்கள் என்றால் சரிதான். இறந்தவர் எனக்கு தெரிந்த நபர் என்ற காரணத்தினால் போலீசார்

என்னிடம் புகார் வாங்கிகொண்டார்கள் என்றால் சரிதான்.

(சாட்சி பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் அவரை பிறழ் சாட்சியாக அறிவித்து அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எனது முதல் விசாரணையில் முதல் எதிரியை நான் அடையாளம் காட்டினேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை.

**மறுவிசாரனண - இல்லை**